# 'மட்டக்களப்பின் மணிவிளக்கே!... ......வாழ்வாய் நீ!'

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

★

## திதி வெண்பா

வருடமா னந்தம் வருகார்த் திகைமுற்
பருவம் திரயோ தசியில் — தரும
மயில்வா கனமிந்த மண்விட்டே மீளாத்
துயில்கூடும் நாளென்னவே சொல்.

★ ★ ★

1. செருக்கில் லாத மனப்பண்பும்;
தேர்ந்து தெளிந்த நல்லறிவும்
உருக்கொண் டதுபோல் கண்முன்னே
உலாவித் திரிந்தெம் உளம்புகுந்தாய்;
சுருக்க முடனுன் குணநடையைச்
சொல்வே னெனினும், என்தோழா,
உருக்க முடனே சொல்கின்றேன்;
உனது பிரிவோர் பேரிழப்பே;
உள்ளம் போன்ற உயர்வுடையாய்,
உயர்ந்தா யோவான் உயர்ந்ததுபோல்;
உலகம்தாங்கு மோஇதனைப்
பொறுப்பா ளோஉன் உயிர்த் துணைவி!

2. தந்தை தரும லிங்கமொரு
சிங்க மெனவே தலைநிமிர்ந்து
முந்தி நீதி மன்றத்தில்
முழங்கி வாதம் புரிந்திடுவார்;
மைந்தன் மயில்வா கனம் சாந்த
வடிவாம் சிங்கக் குட்டியம்மா!
எந்த வழக்கே யெனினுமவன்
இனித்துள் ளுருவப் பேசிவெல்வான்;
தன்போற் கனகம் மாபெற்ற
தங்கப் புதல்வா போனாயோ!
தவித்து மனைவி மக்களிங்கே
தனித்துப் புலம்பப் போனாயோ!

3. உண்மைக் கொருவன்; உண்மைமனம்
உருகப் பேசும் உரைக்கொருவன்;
திண்மைக் கொருவன்; திறம்பாத
நேர்மைக் கொருவன்; மனைவியெனும்
பெண்மைக் குரிமை பெற்ற இலட்
சுமிப்பிள் ளைக்கோர் பெருந்துணைவன்;
தண்மைக் கொருவன்; பந்துசனம்
தவிக்கப் பிரிந்து போனானே;
சமூகத் தொண்டின் உயிர்நாடித்
துடிப்பும் கூடப் போனாயோ!
சட்டத் துடனே சேர்மனிதத்
தன்மை துணையாய்ப் போனாயோ!

4. நிமிர்ந்த தோற்றம்; தணிந்த நடை;
நிதமும் படிக்கும் மாணவன்போல்
அமர்ந்தே யிருக்கும் ஆழ்ந்த நிலை;
அன்பு கலந்த கண்ணோட்டம்;
சுமந்தே சமூகப் பிரச்சினைகள்
சுமுகமாகத் தீர்த்து வைக்கும்
சமம்சேர் துலாக்கோல் போன்றநிலை
தனையும் கொண்டு போனாயோ!
தன்னந் தனியே நீபோனால்
இவைகள் தாங்கித் தரித்திடுமோ!
தன்னே ரில்லாத் தமிழ்மகனே
எமக்கேன் இந்தத் துயர் தந்தாய்!

5. பெற்றார்க் கினியன்; மனைவி மக்கட்
கினியன்; கூடப் பிறந்தார்க்கும்,
உற்றார் தமக்கும் இனிய னிவன்;
உடன்மா ணவர்க்கும் மிகவினியன்;
கற்றார்க் கினியன்; கலைபயிற்றும்
நல்லா சிரியர் தமக்கினியன்;
மற்று ளரோ எல்லார்க்கும்
இனியோன் மறைந்து போனானே!
வைத்தான் கால னிவன் மேற்கை;
மறந்தா னிவன்கை வைத்தபல
மக்கள் பணிகள் நிரம்பாமற்
கிடக்கும் குறையை மறந்தானே.

6. உறுதிப் பொருள்கள் போலன்பின்
உண்மைப் புதல்வர் ஐவரையும்,
மறதிப் பொருளாய் விட்டாயோ!
மறந்தா யோபாட் டாளிமக்கள்
உறவை! உணவில் தன்னிறைவுப்
போரிற் களத்தைத் துறந்தாயோ!

மறைவா யோநீ பொதுமக்கள்
வலக்கை முறிந்தாற் போலிங்கே!
மயில்வா கனமே மறைந்தாயோ!
மக்கள் மனத்திற் கலந்தாயோ!
மட்டக் களப்பின் மணிவிளக்கே!
மறைந்தா யல்லை; வாழ்வாய் நீ.

7. வாடுந் துன்பம் கொண்டுமக்கள்
வங்கி யிரங்க இயக்குநற்காய்;
நீடும் நீதி மன்றமுயர்
நியாய வாதிக் கிரங்கிநிற்க;
தேடும் பொருளாம் கூட்டுறவுச்
சேவை தலைவற் கிரங்கியழ;
நாடு வாழ்ரொட் டரிக்கழகம்
நண்பற் கிரங்க நடந்தானே!
நல்லோன் பிரிந்த பேரிழப்பை
நம்மா லீடு செயலாமோ
நாடி உனைப்போல் ஒருமகனை
நாங்கள் இன்னும் பெறலாமோ.

8. நாடு சோஷ லிசம்நோக்கி
நடக்கும் வழியில் இடைநடுவே
பீடு நடைபோட் டேசென்ற
பிரியன் நம்மைப் பிரிந்தானே!
ஏடா! தோழன், சமதருமம்
இதனோ ருயிர்தான் போனதுபோல்
கூடாத் துன்பம் நாமடையக்
கூடிப் பிரிந்து போனானே!
கூடு கிடக்கக் குருவிவிட்டுப்
பறந்த மாயம் மிகக் கொடிதே!
கொண்ட மனைவி பொறுப்பாளோ!
குமரர் தாங்கிப் பொறுப்பாரோ!

9. தணிக்க முடியாத் தமிழுணர்ச்சிக்
கனலால் இரத்தம் கொதித்ததுவோ!
இணைக்க முடியா இனபேதம்
இதயத் தியங்கும் ஈரிதழைப்
பிணக்கஞ் செய்யத் துடிப்பு நின்று
பிரிந்தா னேபோய்ப் பேசாமே!
கணத்தி லுயிர்தான் போனதற்கே
எதுகா ரணமோ நாமறியோம்!
கரும வீரர் பலர்வாழ்க்கை
வடிக்கி தொருபே ரடியாச்சே!
கணக்கு முடிந்து போனாயோ
கண்போல் மயில்வா கனமேநீ!

10. உடலம் கிடக்க உயிர்போயிற்
றென்றும் கலங்கிப் பயனில்லை;
கடமை கிடக்கு ததுதெய்வம்
காண்பீர்; மயில்வா கனம்விட்ட
உடைமை நமக்கென் றுணர்ந்திதனை
உயிர்போற் காப்போம் தோழர்களே !
திடமே நமக்குத் தந்தருளும்
தெய்வம்; இறந்து மிறவாதோன்
சேர்க சாந்தி யென அவற்குச்
செலுத்து வோம் நாம் அஞ்சலியே.
செல்வன் மயில்வா கனனுயிர்தான்
சேர்க சாந்தி ஓம் சாந்தி!
சாந்தி! சாந்தி! சாந்தி!

★ ★ ★